# காடுகள் தான் மக்களின் வாழ்வாதாரம்

## தேக்கடி கருத்தரங்கில் தகவல்

தேக்கடி, ஏப். 26–

'காடுகள் இல்லையெனில் மக்களின் வாழ்வாதாரம் இல்லை,' என தேக்கடி பெரியாறு புலிகள் காப்பகத்தில் நடந்த கருத்தரங்கில் தெரிவிக்கப்பட்டது.

தேனி 'வனம்' அமைப்பு சார்பில் நடந்த நிகழ்ச்சியில் புலிகள் காப்பக உதவி ஏரியா இயக்குனர் ஜான் மேத்யூ வரவேற்றார்.

துணை இயக்குனர் சஞ்சயன் குமார் பேசியதாவது: மக்களின் வாழ்வாதாரத்திற்கு அடிப்படையான காடுகளை காப்பது குறித்து மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்பட வேண்டும். வீடுகளில் பலவகை பூட்டுகளை பூட்டி வைக்கும் போதிலும் கூட பொருட்கள் திருடு போய் விடுகின்றன. அப்படியுள்ள நிலையில் காடுகள் திறந்த வெளியாக உள்ளன.

2,200 சதுர கி.மீ.,ல் அமைந்த பெரியாறு புலிகள் காப்பகத்தை மக்கள் ஒத்துழைப்புடன் தான் காப்பாற்ற முடியும். 'காடுகளை ஏன் பாதுகாக்க வேண்டும்' என அறிவது அவசியம். காடுகள் இருப்பதால் தான் தண்ணீர் கிடைக்கிறது. பெரியாறு தண்ணீரை நம்பி தமிழகத்தில் ஐந்து மாவட்டங்கள் உள்ளன. காடுகள் இல்லை எனில் மக்களின் வாழ்வாதாரம் இல்லை.



தேக்கடியில் நடந்த கருத்தரங்கில் பெரியாறு புலிகள் காப்பக துணை இயக்குனர் சஞ்சயன் குமார் பேசினார். இடமிருந்து உதவி ஏரியா இயக்குனர் ஜான் மேத்யூ, மேகமலை வன உயிரின சரணாலய காப்பாளர் சொர்ணப்பன்.

உலகில் சிறந்த வன உயிரின சரணாலயமாக இந்த பலிகள் காப்பகம் கிகம்கிரகு. காடுகளில் உள்ள பழங்குடியினருக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தி கொடுக்காவிட்டால் வனத்தை சேதப்படுத்தி விடுவர். இதற்காக தான் உலக வங்கி நிதியுடன் சுற்றுச்சூழல் மேம்பாட்டு கமிட்டி மூலம், பல திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

கேரளா, தமிழகம் எல்லை பகுதிகளில் அமைந்த இந்த வனத்திற்கு இரு மாநிலத்த வரும் சேர்ந்து பாதுகாப்பு கொடுத்தால் தான் வனவிலங்குகளை காக்க முடியும் என்றார்.

**மேகமலை:** மேகமலை வன உயிரின சரணாலய காப்பாளர் சொர்ணப்பன் பேசியதாவது:

மேகமலை வன உயிரின சரணாலயத்தில் வனத்துறை சார்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளால் காடுகளை அழிப்பவர்கள் மத்தியில் பயம் வந்துள்ளது. பொதுவாக பயம் வந்தால் ஒழுக்கம் ஏற்படும். அந்நிலை ஏற்படும் போது வனம் காக்கப்படும்.

களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகத்தில் நான் பணிபுரிந்த போது தான் 1996ல் உலக வங்கி நிதியுடன், மக்கள் பங்களிப்புடன் 'சுற்றுச்சூழல் மேம்பாட்டு திட்டம்' கொண்டு வரப்பட்டது.

களக்காடு காட்டில் 56 வழித்தடங்கள் இருந்தன. சுற்றியுள்ள கிராமத்தினர் காட்டிற்குள் சென்று சேதப்படுத்தினர். வண்டிகளில் விறகு எடுத்து கொண்டிருந்தனர். விறகு எடுக்க செல்லும் போது மண்டிய புதர்களை வெட்டுவர். சில நேரங்களில் தீ வைப்பர். இப்படி காடுகள் அழிக்கப்பட்டன.

ஒரு நாள் விறகு வெட்ட வந்த மூதாட்டியிடம் விசாரித்த போது, அதை ரூ.35 க்கு விற்று குடும்பத்தை நடத்துவது தெரிந்தது. உதவி செய்தால் காடுகளுக்குள் செல்வதை தவிர்த்து, இட்லி சுட்டு விற்பதாக தெரிவித்தார். 'சுற்றுச்சூழல் மேம்பாட்டு திட்டம்' மூலம் நிதியுதவி செய்யப்பட்டது.

மற்றொரு பெண்ணுக்கு ரூ.1500 கொடுத்தோம். அவர் அதில் சவரிமுடி தயாரித்து மூன்று மாதங்களில் அந்த பணத்தை திரும்பி வழங்கியதுடன், மேலும் சம்பாதிக்க துவங்கினார்.

புலிகள் இருந்தால் தான் காடுகளை காப்பாற்ற முடியும். புலிகள் இருந்தால் அங்கு வனஉயிரினங்கள் இருப்பதாக அர்த்தம். ஆஸ்திரேலியா, தென் அமெரிக்கா காடுகளில் குறிப்பிட்ட சில வகை தாவரங்கள் இருக்கும். மேகமலை வன உயிரின சரணாலயத்தில் 50 ஏக்கரில் ஆய்வு செய்த போது 27 தாவர வகைகள் இருந்தது தெரிந்தது; அந்த தாவரங்கள் வளரும் சூழ்நிலையை உருவாக்கினோம். அங்கு யானைகள், மான்கள் வரத்துவங்கின.

இந்த சரணலாயம் 200 சதுர கி.மீ., அடர்ந்த வனம். இங்கிருந்து வற்றாத ஜீவ நதியாக வைகை ஓடியிருக்க வேண்டும். அதனால் தான் ஆற்றையொட்டி மதுரை போன்ற நகரங்கள் உருவாகின என்றார்.

பயிற்சி அலுவலர் சைமன் பிரான்சிஸ், வன உயிரின ஆய்வாளர் வைரவேல், இயற்கை கல்வி அலுவலர் சுஜீஸ் மற்றும் பலர் பேசினர். 'வனம்' இயக்குனர் டாக்டர் ராஜ்குமார் நன்றி கூறினார். ஒருங்கிணைப்பாளர்கள் சுந்தரமூர்த்தி, விநாயக மூர்த்தி, டாக்டர் கலைவாணன், ராம் ஏற்பாடுகளை செய்தனர்.